# பிரதான தரவு ஆவணம்
## வணிக வங்கியியல் தீர்வுகள்

| | |
|---|---|
| தகைமை | 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய, இலங்கையில் வதிவுரிமை கொண்ட நபர்கள் |
| தயாரிப்பின் விளக்கம் | முரபஹா என்பது ஒரு ஒப்பந்தமாகும். இதில், வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில், வங்கி மூன்றாம் தரப்பு சப்ளையர்/விற்பனையாளரிடமிருந்து ஒரு சொத்தை வாங்கும். பின்னர், ஒப்பந்தம் செய்யப்பட்ட இலாபத்தொகையை (செலவு மற்றும் இலாபம்) சேர்த்து, அதை வாடிக்கையாளருக்கு மீண்டும் விற்பனை செய்யும். இந்த விற்பனை உடனடிப் பணம் செலுத்துதல் மூலமாகவோ அல்லது தாமதப்படுத்தப்பட்ட தவணை முறை அடிப்படையிலோ இருக்கலாம். |
| முரபஹாவின் வகை | **1. உள்ளூர் முரபஹா** - ஒரு முரபஹா பரிவர்த்தனை வாடிக்கையாளருடன் உள்ளூரில் மற்றும் குறுகிய காலத்திற்கு செய்யப்படுவதாகும்.<br>**2. நீடித்த முரபஹா** - ஒரு முரபஹா பரிவர்த்தனை ஓராண்டுக்கும் மேலான காலத்திற்கு செய்யப்படும்போது, நீட்டிக்கப்பட்ட முரபஹா பயன்படுத்தப்படலாம். நீட்டிக்கப்பட்ட முரபஹாவிற்கு, கால வரையறை கொண்ட LC நேரம் பாதிக்கப்படாது.<br>**3. இறக்குமதி முரபஹா** – இறக்குமதி முரபஹா ஊடாக எந்தவொரு இறக்குமதியுடன் தொடர்புடைய பரிவர்த்தனைகளையும் மேற்கொள்ளலாம்.<br>**4. முஸாவமா** – பரிவர்த்தனை ஒன்றின் செலவை இனங்காணப்பட முடியாவிடின், விற்பனை செய்யும் விலை மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தால், உள்ளூர் அல்லது சர்வதேச முஸாவமா பயன்படுத்தப்படலாம். |
| தயாரிப்பு உள்ளம்சங்கள் | **பின்வரும் குறுகிய /மத்தியளவு/நீண்ட கால நிதிவசதியளிப்புக்காக முரபஹா பயன்படுத்தப்படும்:**<br>மூலப் பொருட்கள், கையிருப்புப் பொருட்கள், உபகரணங்கள், சொத்துக்களுக்கான நிதிவசதியளிப்பு, வாகனங்களுக்கான நிதிவசதியளிப்பு (நீட்டிக்கப்பட்ட முரபஹா), அல்லது வாங்கப்பட வேண்டிய வேறு ஏதேனும் சொத்துக்கள்.<br>• வாடிக்கையாளருக்கு விற்கப்படும் பொருள் கண்ணுக்குப் புலப்படும் வடிவத்தில் இருக்க வேண்டும் அல்லது அதன் இருப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும், மேலும் விற்பனையாளர் அந்தப் பொருளின் உரிமையைக் கொண்டிருக்க வேண்டும்.<br>• வங்கி, வாடிக்கையாளர் மற்றும் விற்பனையாளர் ஆகியோர் பொருளின் விலை தொடர்பில் பரஸ்பரம் உடன்பட வேண்டும்.<br>• முரபஹா ஒப்பந்தத்தில் ஒரு தரப்புக்கு மாத்திரம் சார்பான ஏதேனும் நிபந்தனைகள் அடங்கியிருக்க முடியாது, இது வழமையான சந்தை செயற்பாடுகளுக்கு அமைவானதும் அல்ல.<br>• நெகிழ்ச்சியான மீளச்செலுத்தும் திட்டங்கள் (குறுகிய காலம் / நீண்ட காலம்) |

| | |
|---|---|
| | • தாமதப்படுத்தப்பட்ட தவணை முறை அடிப்படையிலான முரபஹா விற்பனை (பை முஅஜ்ஜல்), ஷரியா இணக்கத்துடன் இருக்க பின்வருவனவற்றை உறுதி செய்ய வேண்டும்.<br>- வாடிக்கையாளருக்கு கொடுப்பனவு திகதியை வங்கி குறிப்பிட வேண்டும்.<br>- நிலையான காலம் என்பது பொருள் கையளிக்கப்படும் நேரத்திலிருந்து ஆரம்பிக்கும்.<br>- முன்கூட்டிய அல்லது காலம் தாழ்த்திய செலுத்தித்தீர்த்தலுக்காக நிலையான விலையை மாற்ற முடியாது.<br>- மீளச் செலுத்தலை உறுதி செய்வதற்காக பிணையை வங்கி கோருவதற்கான அதிகாரம் உள்ளது. |
| தேவையான ஆவணங்கள் | • முரபஹா நிதிவசதியளிப்புக்கான விண்ணப்பம்<br>• மாதிரி கட்டணப் பட்டியல்<br>• பிரதான முரபஹா உடன்படிக்கை<br>• முகவர் உடன்படிக்கை<br>• முரபஹா பரிவர்த்தனை ஆவணம் (பொருள்/சொத்தை அமானா வங்கியிடமிருந்து உடன்பட்ட விலையில் மீளகொள்வனவு செய்வதை உடன்பட வைக்கும்)<br>• சலுகை மற்றும் ஏற்றுக் கொள்ளல் கடிதம்<br>அருகிலுள்ள கிளைக்கு விஜயம் செய்யவும் அல்லது நிறுவன இணையத்தளத்தினூடாக டவுன்லோட் செய்யவும்:<br>https://www.amanabank.lk/application-downloads.html |
| கட்டணங்கள் மற்றும் கூலிகள் | தற்போதைய கட்டணங்கள் மற்றும் கூலிகள் எமது நிறுவன இணையத்தளத்தில் காணப்படும்:<br>https://www.amanabank.lk/tariff-services.html |
| நியதிகள் மற்றும் நிபந்தனைகள் | தயாரிப்பின் தகவல்கள் மற்றும் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் போன்றன காலா காலத்தில் மாறுபடும். எனவே, பிந்திய தகவல்கள் மற்றும் தற்போது அமலிலுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு அருகிலுள்ள கிளையுடன் தொடர்பு கொள்ளவும் அல்லது எமது நிறுவன இணையத்தளத்தை பார்க்கவும்:<br>https://www.amanabank.lk/pdf/application-downloads/general-business-conditions.pdf |